**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# The Vanishing Shortwave Radios: History, Decline, and Future Outlook

**N. Arun Kumar*,**
*Correspondence: trnarunkumar@gmail.com.

**Article Info**
Received on 20-April-2026, Revised on 27-Feb-2026, Accepted on 27-Feb-2026, Published on 01-March-2026

## ABSTRACT

Shortwave radio has historically served as a vital pillar of global communication, utilizing high-frequency signals to bridge vast distances and connect the global Tamil diaspora to their linguistic roots. Beyond mere information sharing, these broadcasts fostered a unique sense of cultural belonging and provided a platform for language preservation during eras when digital connectivity was non-existent. This research paper meticulously examines the historical trajectory of Tamil shortwave services, analyzing their profound socio-cultural influence and the subsequent decline triggered by the rise of satellite technology and internet streaming. Furthermore, the study evaluates the contemporary challenges of high operational costs against the potential for a digital resurgence through Digital Radio Mondiale (DRM), ultimately assessing the medium's enduring relevance as a resilient communication tool in an increasingly digital-centric world.

***KEYWORDS:*** *Shortwave Radio, Tamil Broadcasting, QSL Card, Reception Report, Radio History, Media Transformation, Information Exchange.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# அழிந்து வரும் சிற்றலை வானொலிகள்: வரலாறு, வீழ்ச்சி மற்றும் எதிர்காலப் பார்வை

**N. அருண் குமார், Email: trnarunkumar@gmail.com**

**சுருக்கம் (Abstract)**

சிற்றலை வானொலி (Shortwave Radio) உலகளாவிய தகவல் பரிமாற்றத்தில் முக்கிய பங்காற்றிய ஊடகமாகும். குறிப்பாக, தமிழர்களின் பரவலான குடியேற்றத்துடன், பல்வேறு நாடுகளில் இருந்து தமிழ் மொழி ஒலிபரப்புகள் நடைபெற்றன. இவ்வாய்வுக் கட்டுரை சிற்றலை வானொலிகளின் வரலாற்றுப் பின்னணி, அதன் சமூக-கலாச்சார தாக்கம், சமகாலத்தில் அதன் வீழ்ச்சிக்கான காரணிகள் மற்றும் எதிர்காலப் பயன்முறைகள் குறித்து பகுப்பாய்வு செய்கிறது.

**முக்கிய சொற்கள் (Keywords)**

சிற்றலை வானொலி, தமிழ் ஒலிபரப்பு, QSL அட்டை, Reception Report, வானொலி வரலாறு, ஊடக மாற்றம், தகவல் பரிமாற்றம்.

**முன்னுரை (Introduction)**

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து 21ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை சிற்றலை வானொலி உலகளாவிய தகவல் பரிமாற்றத்தின் முக்கிய கருவியாக இருந்தது. குறிப்பாக, உலகம் முழுவதும் வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் ஊடகமாக இது செயல்பட்டது. வெளிநாட்டு வானொலி நிலையங்களின் தமிழ் சேவைகள்—செய்தி, இசை, கலாச்சாரம் மற்றும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளின் மூலம்—தமிழர்களின் அறிவையும் பார்வையையும் விரிவுபடுத்தின.

சிற்றலை வானொலி நிலையங்கள் ஒரு காலத்தில் உலகளாவிய தகவல் பரிமாற்றத்தின் முதுகெலும்பாக இருந்தன. குறிப்பாக இணையம் அல்லது செயற்கைக்கோள் தொழில்நுட்பம் வளராத காலங்களில், கண்டங்களைத் தாண்டி செய்திகள், கலாச்சாரம், இசை மற்றும் அரசியல் தகவல்களை பரப்புவதில் இவை மிக முக்கிய பங்காற்றின. சிற்றலை வானொலி சமியைகள் அயனி மண்டலம் என்ற வளிமண்டல அடுக்கில் பிரதிபலித்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் தாண்டிச் செல்லும் திறன் கொண்டதால், ஒரு நாட்டில் இருந்து ஒலிபரப்பான நிகழ்ச்சிகளை உலகின் பல பகுதிகளில் உள்ள மக்கள் எளிதாகக் கேட்க முடிந்தது. இதனால் சர்வதேச ஒலிபரப்புகள், குறிப்பாக அரசியல் மற்றும் கலாச்சார தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாக சிற்றலை வானொலி விளங்கியது.

ஆனால், கடந்த சில வருடங்களாக ஏற்பட்ட வேகமான தொழில்நுட்ப வளர்ச்சி முன்னேற்றங்கள் சிற்றலை வானொலி நிலையங்களின் முக்கியத்துவத்தை படிப்படியாகக் குறைத்தன. மேலும், சிற்றலை வானொலி ஒலிபரப்புகளை பராமரிப்பது மிகவும் செலவான ஒன்றாகும். பெரிய

அளவிலான ஒலிபரப்பி, விரிவான ஆன்டெனா அமைப்புகள் மற்றும் அதிக மின்சார பயன்பாடு ஆகியவை இதன் செயல்பாட்டு செலவுகளை அதிகரித்தன. பல அரசுகள் மற்றும் தனியார் ஒலிபரப்பு நிறுவனங்கள் இந்த அதிக செலவினத்தை நீண்ட காலம் தாங்க முடியாமல், தங்கள் சிற்றலை சேவைகளை குறைக்கவோ அல்லது முழுமையாக நிறுத்தவோ முடிவு செய்தன.

குறிப்பாக, அமெரிக்காவிற்கும் ரசியாவிற்கும் போர்சூழலும் அபாயம் இருந்த காலத்தில் அரசியல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட சிற்றலை ஒலிபரப்புகள், அந்த காலம் முடிந்த பின் அவற்றின் அவசியம் குறைந்ததால் பெருமளவில் குறைக்கப்பட்டன. அதேபோல், முன்பு தொலைதூர நாடுகளில் உள்ள மக்களை அடைவதற்காக சிற்றலை வானொலி பயன்படுத்தப்பட்டாலும், இப்போது சமூக ஊடகங்கள், இணைய தளங்கள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் மூலம் நேரடியாக மக்களை அடைய முடிகிறது. இதனால் சிற்றலை ஒலிபரப்பின் தாக்கமும் அதன் தேவையும் குறைந்தது. மேலும், பல நாடுகளில் உள்ளூர் பண்பலை நிலையங்கள் மற்றும் பிராந்திய மொழி ஒலிபரப்புகள் அதிகரித்ததால், மக்கள் தங்கள் சொந்த மொழியில் உள்ளூர் தகவல்களை பெறுவதில் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கினர்.

**சிற்றலை வானொலிகளின் சமூக-கலாச்சார தாக்கம்**

சிற்றலை வானொலி தனது ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை பல்வேறு மாற்றங்களையும் பரிணாமங்களையும் அடைந்துள்ளது. இந்த மாற்றங்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், அரசியல் சூழல்கள், மற்றும் மக்களின் தகவல் பயன்பாட்டு பழக்கவழக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக உருவாகியவை. ஒரு காலத்தில் உலகின் மிக முக்கியமான தொடர்பு சாதனமாக இருந்த சிற்றலை வானொலி, காலப்போக்கில் தனது வடிவத்தையும் பயன்பாட்டையும் மாற்றிக் கொண்டு வந்துள்ளது.

சிற்றலை வானொலியின் தொடக்ககாலம் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொடங்குகிறது. அப்போது ரேடியோ அலைகள் நீண்ட தூரங்களில் பரவக்கூடியவை என்பதைக் கண்டறிந்த விஞ்ஞானிகள், குறுகிய அலைகள் அயனோஸ்பியர் வழியாக பிரதிபலித்து உலகம் முழுவதும் செல்லும் திறன் கொண்டது என்பதை புரிந்துகொண்டனர். இதனால், நாடுகள் தங்களின் குரலை உலகம் முழுவதும் கொண்டு செல்ல சிற்றலை ஒலிபரப்புகளைத் தொடங்கின. குறிப்பாக இரண்டாம் உலகப் போரின்போது மற்றும் அதன் பின்னர், தகவல் பரிமாற்றம் மற்றும் பிரச்சாரத்திற்காக சிற்றலை வானொலிகள் ஒரு முக்கிய ஆயுதமாக மாறியது.

பின்னர் கோல்டு வார் எனப்படும் ரஷ்யாவிற்கு அமெரிக்காவிற்கும் இடையேயான போர் காலகட்டத்தில் சிற்றலை வானொலி தனது உச்ச கட்டத்தை எட்டியது. அமெரிக்கா, சோவியத்

ஒன்றியம் மற்றும் பிற நாடுகள் தங்கள் அரசியல் கருத்துக்களை மற்ற நாடுகளுக்கு பரப்ப சிற்றலை சேவைகளை அதிகமாக பயன்படுத்தின. அப்போது BBC World Service, Voice of America போன்ற சர்வதேச ஒலிபரப்பு அமைப்புகள் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான நேயர்கள் நிகழ்ச்சிகள் கேட்பவர்களை சென்றடைந்தன. இந்த காலத்தில் சிற்றலை என்பது வெறும் தகவல் பரிமாற்ற கருவி மட்டுமல்ல; அது ஒரு அரசியல் மற்றும் கலாச்சார தாக்கத்தை ஏற்படுத்தும் சக்திவாய்ந்த ஊடகமாகவும் இருந்தது.

1970கள் முதல் 1990கள் வரை சிற்றலை வானொலி தனது தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் கண்டது. புதிய ஒலிபரப்பிகள், மேம்பட்ட ஆன்டென்னா அமைப்புகள் மற்றும் அதிக சக்தி கொண்ட ஒலிபரப்பு முறைகள் மூலம் ஒலியின் தரம் மற்றும் பரப்பளவு மேம்படுத்தப்பட்டது. அதே நேரத்தில், பல நாடுகள் தங்கள் மொழிகளில் சர்வதேச சேவைகளைத் தொடங்கி, பல்வேறு கலாச்சாரங்களை உலகிற்கு அறிமுகப்படுத்தின. இது சிற்றலை வானொலியின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. ஆனால் 1990களின் இறுதியில் இருந்து ஒரு பெரிய மாற்றம் ஆரம்பமானது. இணையம் மற்றும் டிஜிட்டல் தொடர்பு தொழில்நுட்பங்கள் வேகமாக வளரத் தொடங்கின. இதனால், சிற்றலை வானொலியின் பாரம்பரிய பங்கு சவால்களை எதிர்கொண்டது. மக்கள் தகவல்களை பெற இணையத்தை அதிகமாக பயன்படுத்தத் தொடங்கினர்.

இதே நேரத்தில், சிற்றலை துறையில் புதிய மாற்றங்கள் தோன்றின. Digital Radio Mondiale (DRM) போன்ற டிஜிட்டல் சிற்றலை ஒலிபரப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது டிஜிட்டல் அல்லாத ஒலிபரப்பை விட அதிக தரமான ஒலி, குறைந்த இடையூறு மற்றும் கூடுதல் தகவல் சேவைகளை வழங்கும் திறன் கொண்டது. இதனால் சிற்றலை முழுமையாக மறைந்து விடாமல், புதிய வடிவத்தில் தன்னை மாற்றிக் கொள்ள முயற்சித்தது. மேலும், சிற்றலை வானொலி தனது பயன்பாட்டை மாற்றிக் கொண்டது. முன்பு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இருந்த இந்த ஊடகம், தற்போது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் முக்கிய பங்காற்றுகிறது. உதாரணமாக, இயற்கை பேரழிவுகள் ஏற்பட்டபோது இணையம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் செயலிழக்கும்போது சிற்றலை வானொலி ஒரு நம்பகமான தகவல் ஊடகமாக மாறுகிறது. அதேபோல், இணைய கட்டுப்பாடுகள் உள்ள நாடுகளில் வெளிநாட்டு தகவல்களைப் பெற சிற்றலை இன்னும் பயன்படுத்தப்படுகிறது.

இன்றைய காலத்தில் சிற்றலை வானொலி ஒரு பரிணாம நிலையை அடைந்துள்ளது. அது தனது பழைய புகழை இழந்தாலும், முற்றிலும் மறைந்துவிடவில்லை. மாறாக, அது ஒரு சிறப்பு பயன்பாட்டு ஊடகமாக மாறியுள்ளது. சில வானொலி ஆர்வலர்கள் இன்னும் சிற்றலை ஒலிபரப்புகளை ஆர்வத்துடன் கேட்டு வருகின்றனர். இது ஒரு தொழில்நுட்ப பாரம்பரியமாகவும், தொடர்பு வரலாற்றின் ஒரு முக்கிய அத்தியாயமாகவும் தொடர்கிறது.

சிற்றலை வானொலி, தனிநபர் வளர்ச்சியிலும், சமூக விழிப்புணர்விலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக,

- பல்வேறு நாடுகளின் கலாச்சாரம், வரலாறு மற்றும் அரசியல் அமைப்புகளை அறிய வழிவகுத்தது.
- மொழி திறனை மேம்படுத்த உதவியது.
- சர்வதேச நட்பு மற்றும் புரிதலை வளர்த்தது.

மேலும், நேயர்கள் வானொலி நிலையங்களுக்கு "Reception Report" அனுப்பி, அதன் மூலம் QSL அட்டைகள் பெற்றனர். இது ஒரு தனித்துவமான தொடர்பு பண்பாட்டை உருவாக்கியது. தபால் தலை சேகரிப்புடன் இணைந்து, வானொலி கேட்பது அறிவார்ந்த பொழுதுபோக்காக அமைந்தது.

**வரலாற்றுப் பின்னணி மற்றும் அனுபவச் சான்றுகள்**

தொலைக்காட்சி பரவலாக அறிமுகமாகும் முன், வானொலி குடும்ப வாழ்க்கையின் அங்கமாக இருந்தது. காலைப் பொழுதில் ஒலித்த இசை நிகழ்ச்சிகள், இரவு நேர செய்தி ஒலிபரப்புகள் ஆகியவை அன்றாட வாழ்வின் ஓர் அங்கமாக இருந்தன. பல தலைமுறைகளுக்கு வானொலி, தகவல் மற்றும் பொழுதுபோக்கின் முதன்மை ஊடகமாக இருந்தது.

**சிங்கப்பூர் பன்னாட்டு வானொலி**

1935-ஆம் ஆண்டில்தான் சிங்கப்பூரின் முதல் அதிகாரப்பூர்வ வானொலி ஒலிபரப்பு நிறுவனமான பிரிட்டிஷ் மலாயா ஒலிபரப்புக் கழகத்திற்கு (BMBC) ஏகபோக உரிமம் வழங்கப்பட்டது என்றாலும் கூட, சிங்கப்பூரில் வானொலி ஒலிபரப்பின் தோற்றத்தை, அதற்கு ஒரு தசாப்தத்திற்கும் முன்னரே, அதாவது 1924-ஆம் ஆண்டில் மலாயாவின் கம்பியில்லாச் வானொலி பயன்பாட்டாளர் சங்கம் நிறுவப்பட்டு அவர்கள் தகவல் பரிமாற்றம் செய்துவந்துள்ளனர்.

ஆனால், BMBC தொடங்கப்படுவதற்கு முன்பே, சிங்கப்பூர் மக்கள் பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கழகத்தின் (தற்போது BBC உலகச் சேவை) எம்பயர் சர்வீஸ் உட்பட, உலகம் முழுவதிலுமிருந்து வரும் சிற்றலை வானொலி ஒலிபரப்புகளைக் கேட்டு வந்தனர். பிற்காலகட்டத்தில் பிரிட்டிஷ் மலாயா ஒலிபரப்புக் கழகம் பல்வேறு மாற்றங்களை கண்டது.

1994-ஆம் ஆண்டில் அப்போதைய சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழகத்தால் ரேடியோ சிங்கப்பூர் இன்டர்நேஷனல் சிற்றலை வானொலி நிலையம் நிறுவப்பட்டது. சிங்கப்பூர் மக்களைச் சென்றடைவதையும், வெளிநாடுகளில் வசிக்கும் சிங்கப்பூரர்கள் இந்த தீவு நாட்டில் ஏற்படும் முன்னேற்றங்களைத் தெரிந்துகொள்ள உதவுவதையும் இந்த சிற்றலை வானொலி நோக்கமாகக் கொண்டிருந்தது.

ஜூலை 2008 யில் ரேடியோ சிங்கப்பூர் இன்டர்நேஷனல் தன்னுடைய சிற்றலை ஒளிபரப்பை நிறுத்தியது. பண்பலை வானொலி ஒலிபரப்பு வலுவாகத் தொடர்ந்தாலும், நேயர்கள் தங்கள் செய்திகளுக்காக இணைய வானொலி மற்றும் பல்வேறு இணையதளங்களை நாடி வருகின்றனர். மேலும், சிங்கப்பூரை சுற்றியுள்ள மக்கள், ஆசியக் கண்ணோட்டத்துடன் கூடிய உலகளாவிய நிகழ்வுகள் குறித்த செய்திகளையும் தகவல்களையும் பெறுவதற்காக, மீடியாகார்ப்பின் சேனல் நியூஸ் ஆசியா தொலைக்காட்சி மற்றும் வேறு சில காட்சி ஊடகங்களை காண்கின்றனர். இது போன்ற சில காரணங்களுக்காக ரேடியோ சிங்கப்பூர் இன்டர்நேஷனல் தன்னுடைய சிற்றலை ஒளிபரப்பை நிறுத்தியது. அதுமட்டுமல்லாது நிகழ்ச்சிகளை சிற்றலையில் ஒளிபரப்ப பயன்படுத்தப்படும் ஒலிபரப்பு டிரான்ஸ்மிட்டர்களைப் பராமரிப்பதற்கான செலவு பன்மடங்கு அதிகரித்தது போன்ற பல்வேறு காரணங்களால் சிற்றலை சேவையை ரேடியோ சிங்கப்பூர் இன்டர்நேஷனல் நிறுத்தியது.

**பிபிசி தமிழ் சேவை - பிபிசி தமிழோசை**

பிரித்தானிய ஒளி-ஒலி ஒலிபரப்பு நிறுவனமான பிபிசி 1941 மே மாதம் மூன்றாம் நாள் பிபிசி தமிழ் சேவையை சிற்றலையில் துவங்கியது, அதற்கு பிபிசி தமிழோசை என்று பெயரிட்டது. 1941 ஆம் ஆண்டு தனது ஒலிபரப்பைத் தொடங்கிய பிபிசி தமிழ்ப் பிரிவு, வாரம் ஒருமுறை இலங்கை மடல் என்ற பெயரில் தான் தனது ஒலிபரப்பை முதலில் நடத்தியது.

முதலில் வாரம் ஒரு முறை, பின்னர் வாரமிருமுறை இலங்கை மடலாக ஒலித்து வந்த தமிழோசை, அப்போதைய காலகட்டங்களில் சஞ்சிகை வடிவிலேயே வந்தது. தமிழ் இலக்கியம், நாடகம், கலை என செய்திகளைவிட பிற அம்சங்களை அதிகம் தாங்கி ஒலித்தது தமிழோசை.

அப்போதெல்லாம், தமிழோசையின் தயாரிப்பாளர்கள் சொந்தமாக வடித்த நாடகங்கள் தவிர ஆங்கில மற்றும் பிற மொழி நாடகங்களின் மொழியாக்கங்களும் தமிழோசையில் இடம்பெற்று வந்தன. குறிப்பாக, புகழ் பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் பல நாடகங்கள் தமிழோசையின் ஆசிரியர் சங்கர் என்ற சங்கரமூர்த்தியால் தமிழாக்கம் செய்யப்பட்டு தமிழோசையில் அரங்கேறின என்ற தகவல்களை பிபிசி தமிழோசையின் இணையத்தளம் நமக்கு தந்துள்ளது.

1980 களின் முற்பகுதியில் இலங்கையில் துவங்கிய இனப்பிரச்சையை பிபிசி தமிழோசை உலகமே அறியும் வகையில் சிற்றலை வானொலி மூலம் உலகின் அனைத்து பகுதிகளுக்கும் கொண்டுசென்றது. இலங்கைப் பிரச்சினை மட்டுமல்லாது, தமிழ் நாட்டின் அரசியல் மற்றும் இந்திய அரசியலையும் பிரதிபலிக்கும் செய்திகளையும் தமிழோசை தொடர்ந்து ஒலிபரப்பியுள்ளது.

சிற்றலை வானொலியில் 76 ஆண்டுகள் கோலோச்சிய பிபிசி தமிழோசை 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் காற்றையில் பறப்பதை நிறுத்திக்கொண்டது. இது பற்றி கே. ராஜா என்ற சிற்றலை வானொலி நேயர் கூறும் போது, இலங்கையில் நடக்கும் போர் பற்றிய செய்தியாய்

இருந்தாலும் சரி அமெரிக்காவிற்கும் இராக்கிற்குமான போராக இருந்தாலும் சரி செய்தியென்று வந்தாலே எங்களுக்கு பிபிசி தமிழோசை தான் என்றார் அவர்.

தமிழ் நாடகம், இசை போன்ற பல சுவாரஸ்யமான தலைப்புகளின் வரலாற்றை அறிந்துகொள்ள தமிழோசை ஒரு தளத்தை வழங்கியது, இது சில சுவாரசியமான நிகழ்ச்சிகளுக்கு வழிவகுத்தது. இலங்கையில் போரின் போது தகவல் பெரும் இடைவெளியைக் குறைப்பதில் பிபிசி தமிழோசை பெரும் பங்கு வகித்தது, அந்த நாட்டில் அதிக எண்ணிக்கையிலான நேயர்களை பிபிசி தமிழோசை கொண்டதற்குக் இதுவே காரணமாக இருக்கலாம், என்று பிபிசி தமிழோசையின் மூத்த செய்தியாளர் கோபாலன் இந்து நாளிதழிற்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

**மாஸ்கோ வானொலி தமிழ் சிற்றலை சேவை**

1980-90 களில் மாஸ்கோ வானொலி உலகம் முழுவதும் உள்ள தமிழ் நேயர்களுக்காக தமிழ் சேவையின் மூலம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிவந்தது. இந்திய நேரப்படி மாலை 06:30 முதல் 07:30 வரை ஒரு மணிநேரம் பல்வேறு செய்திகளையும் கலாசார நிகழ்ச்சிகளையும் 16 மற்றும் 19 மீட்டர் சிற்றலை அலைவரிசைகளில் வழங்கியது. நேயர்களின் கடிதங்களை தபால் பை என்ற நிகழ்ச்சியின் மூலம் மாஸ்கோ வானொலி ஒலிபரப்பாளர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் படித்துவந்தனர். இந்த நிகழ்ச்சி வானொலி நேயர்கள் மத்தியில் அதிகம் கேட்கப்பட்ட நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருந்துவந்தது. இது போன்றே வாரத்தின் மற்ற நாட்களிலும் , பிரச்சனைகளும் மக்களும் மற்றும் இசையும் பாட்டும் போன்ற நிகழ்ச்சிகள் மக்கள் மத்தியில் அதிகம் பேசப்பட்டவையாக இருந்துவந்தன. மாஸ்கோ வானொலியின் தமிழ் சேவை பிற்காலத்தில் பல்வேறு காரணங்களால் நிறுத்தப்பட்டது.

**சிற்றலை வானொலிகளின் வீழ்ச்சி: காரணிகள்**

சமீப காலங்களில் சிற்றலை வானொலிகள் வீழ்ச்சி அடைவதற்கான முக்கிய காரணிகள் பின்வருமாறு:

- தொழில்நுட்ப மாற்றம்
- செயற்கைக்கோள் தொலைக்காட்சிகள் மற்றும் இணைய தளங்கள் வளர்ச்சி பெற்றதன் விளைவாக, வானொலியின் பயன்பாடு குறைந்தது.
- பண்பலை (FM) வானொலிகளின் வளர்ச்சி
- உள்ளூர் மொழி மற்றும் உடனடி தகவல்களை வழங்கும் பன்பலை வானொலிகள் அதிக வரவேற்பைப் பெற்றன.

நேயர் ஈடுபாட்டின் குறைவு

- நேயர் கடிதங்கள் குறைதல், QSL அட்டைகள் அனுப்பும் நடைமுறை குறைதல் போன்றவை வானொலி நிலையங்களின் தொடர்பை பாதித்தன.
- அதிக பராமரிப்பு செலவுகள்.
- சிற்றலை ஒலிபரப்பி (Transmitter) பராமரிப்புக்கான செலவுகள் அதிகரித்ததால் பல நிலையங்கள் சேவையை நிறுத்தின.
- நிகழ்ச்சி தரத்தில் குறைவு
- நேயர்களின் தேவைகளுக்கு ஏற்ப நிகழ்ச்சிகள் வடிவமைக்காததும் ஒரு முக்கிய காரணமாகும்.

**சமகால நிலை (Current Scenario)**

இன்றைய நிலையில், சில நாடுகள் மட்டுமே சிற்றலை ஒலிபரப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக, சில ஆசிய நாடுகள் பல மொழிகளில் ஒலிபரப்புகளை மேற்கொண்டு வருகின்றன. இந்தியாவும் பல சர்வதேச மொழிகளில் ஒலிபரப்புகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

**எதிர்காலப் பார்வை மற்றும் பரிந்துரைகள்**

சிற்றலை வானொலியின் பயன்பாட்டை மீண்டும் உயிர்ப்பிக்க, பின்வரும் நடவடிக்கைகள் அவசியமாகின்றன:

- இளைஞர்களை ஈர்க்கும் புதிய நிகழ்ச்சி வடிவமைப்புகள்
- நேயர் வட்டங்களின் செயல்பாட்டை அதிகரித்தல்
- QSL அட்டைகள் மற்றும் போட்டிகள் மூலம் ஈடுபாட்டை ஊக்குவித்தல்.
- கல்வி மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்கான பயன்பாட்டை மேம்படுத்தல்

**தீர்மானம் (Conclusion)**

சிற்றலை வானொலி என்பது ஒரு தகவல் ஊடகம் மட்டுமல்ல; அது ஒரு கலாச்சாரத் தூதுவனாகவும், சர்வதேச நட்பு பாலமாகவும் செயல்பட்டுள்ளது. அதன் வீழ்ச்சி தொழில்நுட்ப முன்னேற்றத்தின் இயல்பான விளைவாக இருந்தாலும், அதன் முக்கியத்துவம் குறையவில்லை. சரியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால், இது மீண்டும் ஒரு கல்வி மற்றும் கலாச்சார ஊடகமாக உயிர்ப்பிக்கப்படலாம்.

**References**

[1]. "Digital Radio Mondiale." *Wikipedia*, 15 Oct. 2025, https://en.wikipedia.org/wiki/Digital_Radio_Mondiale.

[2]. "The Future of Shortwave and International Broadcasting." *Milano Ventures Ltd.*, 30 Apr. 2022, https://www.milanoventures.com/the-future-of-shortwave/.

[3]. Malloy, Joseph T. "Principles of Shortwave Radio Communication Are Discovered." *EBSCO Research Starters: History*, 2023, https://www.ebsco.com/research-starters/history/principles-shortwave-radio-communication-are-discovered.

[4]. "Radio Wave | Examples, Uses, Facts, & Range." *Britannica*, 5 Mar. 2026, https://www.britannica.com/science/radio-wave.

[5]. "Shortwave Radio." *Wikipedia*, 10 Jan. 2026, https://en.wikipedia.org/wiki/Shortwave_radio.

[6]. "Voice of America." *Wikipedia*, 21 Apr. 2026, https://en.wikipedia.org/wiki/Voice_of_America.